**சுருக்கம்**

தமிழ்நாடு கல்லூரிக் கல்விப்பணி – முனைவர் ஆர்.பத்மினி,கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், சென்னை மண்டலம், சென்னை – முதுநிலையில் உள்ள தகுதிவாய்ந்த இவருக்கு துறைத்தலைவர் பணியிடத்திற்கு நிகராக சிறப்புப் பணியிடத்தில் (Officer on Special Duty) பணியமர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (எப்.1) துறை

அரசாணை (நிலை) எண்.137 நாள். 18.7.2012

ஆடி, 3

திருவள்ளுவர் ஆண்டு, 2043

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.440, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை நாள்.26.10.1990
2. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடிதம் எண்.12626/ஜெ2/2012, நாள் 24.4.2012
3. அரசாணை (நிலை) எண்135, உயர்கல்வி நாள். 17.7.2012
4. அரசாணை (நிலை) எண்.136, உயர்கல்வி நாள்.18.7.2012.

----------

ஆணை:–

மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் கல்லூரிக் கல்வி இயக்குநர் பதவிக்கான 2012–2013–ஆம் ஆண்டிற்கான தேர்ந்தோர் பெயர்ப்பட்டியலுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதில் பரிசீலிக்கப்பட்ட தகுதிவாய்ந்த நபர்களில், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தெரிவித்துள்ளபடி ஓய்வு பெறும் முன் ஒரு வருட காலத்திற்கு குறையாத பணிக்காலமுடைய முனைவர் ட்டி.செந்தமிழ்ச்செல்வி என்பவரது பெயர் மட்டுமே தேர்ந்தோர் பெயர் பட்டியலில் இடம் பெற்றது. அதன்படி முனைவர் ட்டி.செந்தமிழ்ச்செல்வி என்பவருக்கு கல்லூரிக் கல்வி இயக்குநராக பதவி உயர்வு அளித்து மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

3. இந்நிலையில், கல்லூரிக் கல்வி இயக்குநரால் தேர்ந்தோர் பெயர்ப்பட்டியலுக்கு பரிந்துரைக்கப்பட்ட நபர்களில் முதுநிலை வரிசையில் இளையவரான முனைவர் ட்டி.செந்தமிழ்ச்செல்வி என்பவருக்கு கல்லூரிக் கல்வி இயக்குநராக பதவி உயர்வு வழங்கியமையால், மேலே ஒன்றில் காணும் அரசாணையின்படி இவருக்கு பணிநிலையில் மூத்தவரான முனைவர் ஆர்.பத்மினி என்பவருக்கு துறைத்தலைவர் பணியிடத்திற்கு நிகராக சிறப்பு பணியிடத்தில் (Officer on Special Duty) பணியமர்த்தி துறைத்தலைவருக்கு இணையான

ஊதியம் வழங்கலாம் என அரசு முடிவு செய்து அதன்படி முனைவர் ஆர்.பத்மினி என்பவரை துறைத்தலைவர் பணியிடத்திற்கு நிகராக சிறப்பு பணி அலுவலர் பணியிடத்தில் பணியமர்த்தி, துறைத்தலைவருக்கு இணையான ஊதியம் வழங்க அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தி.ஸ்ரீ.ஸ்ரீதர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர்,(பொ) சென்னை 6
முனைவர் ஆர்.பத்மினி, கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,
சென்னை மண்டலம், சென்னை.
கல்லூரிக் கல்வி இயக்குநர்,(பொ)வழியாக
அனைத்து மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள்
கல்லூரிக் கல்வி இயக்குநர்,(பொ)வழியாக
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை 18.
மாநிலக் கணக்காயர், சென்னை 18.
நகல்:- மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9
கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
உயர்கல்வித்துறை, சென்னை 9.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.